DEPOSITION OF WITNESS
(Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.9 | |
| **Name:** | பாலமுருகன், துணை கண்காணிப்பாளர் ஓய்வு | **Caste** |
| **Father's Name** | பரமசிவம் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 56 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 17-08-2022**
**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று தற்போது காரைக்குடியில் வசித்து வருகிறேன். இதற்கு முன் நான் அறந்தாங்கி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 16.08.2015 16.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த திருமதி.சாந்தகுமாரி அவர்கள் சாத்தியடி சண்முகசுந்தரம் மகன் குமார் என்பவரிடமிருந்து எழுத்து மூலமான புகாரினை பெற்று நாகுடி காவல் நிலைய குற்ற எண்.115/2015 இ.த.ச.பிரிவுகள் 279, 337, 304(A) ஆகிய பிரிவுகளின்கீழான முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்ததை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2) மேற்படி கடந்த 16.08.2015 தேதி 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தினை பார்வையிட்டு சாட்சிகள் சிதம்பரம், சுப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடமானது தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் ஆனது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடமானது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.08.2015 ந்தேதி காலை 6.00 மணியளவில் அறந்தாங்கி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இறந்த சவுந்தர்ராஜன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை ஒன்றினை தயார் செய்தேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கையானது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இறப்பின் காரணம் அறியப்பட்டு பிரேத பரிசோதனை செய்ய காவலர் 505 ஹரிசங்கர் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்ய அறந்தாங்கி அரசு மருத்துவ அதிகாரி அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனையானது மேற்கொள்ளப்பட்டது.

3) மருத்துவர் அளித்த பிரேத பரிசோதனையானது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் குமார், சந்திரா, இளங்கோவன், பாரதி, ரஞ்சித், மணிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலமானது பதிவு செய்யப்பட்டது. 14.09.2015 ந்தேதி விபத்தினை ஏற்படுத்திய TVS Sports வாகனம் TN 55 Y 8768 வாகனத்தையும், TN 63 T 7045 Splender Plus வாகனத்தினையும் வாகன ஆய்விற்கு உட்படுத்தி மேற்படி வாகன மோட்டார் ஆய்வறிக்கையானது தனிதனியாக இருவாகனங்களும் பெற்றேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையானது அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 10.10.2015 ந்தேதி அன்று மோட்டார் வாகன ஆய்வாளரான திரு.கருப்பன்னன் அவர்களை வாக்குமூலம் பெற்று தனியாக பதிவு செய்தேன். பின்னர் அறந்தாங்கி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சரவணன் மற்றும் சாட்சி நேதாஜி, காவலர் 505 ஹரிசங்கர், உதவி ஆய்வாளர் சாந்தகுமாரி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களிடம் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற தன்மைக்கேற்ப இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் 10.10.2015 குற்ற இறுதி அறிக்கையினை அன்று தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

4) இறந்த சவுந்தர்ராஜன் ஊர் ஆனது சம்பவ இடத்திலிருந்து 1/2 கி.மீ என்றால் 1 கி.மீ வரும். சாட்சி பட்டியலில் உள்ள நபர்கள் இறந்த நபரின் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். இரண்டு வாகனங்கள் நேருக்கு நேராக மோதிதான் விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் ஆனது திசை மாறி நடைபெற்றதாக கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எதிரி பின்னால் அமர்ந்து வந்த நேதாஜிக்கு காயம் என்றாலும் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நேதாஜி வாக்குமூலம் அடிப்படையில் இறந்த நபர் மீது நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் குற்ற இறுதி அறிக்கையில் கூறியுள்ளவாறு எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து விபத்தினை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.